# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

*India's National Spiritual Newspaper*

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE (ECHO GROUP)

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Tamil | ₹ 10/-

Vol. XXVII | YEAR OF OUR LORD JESUS CHRIST, OCTOBER 2022 | No. 10


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

### சங்கீதம் 73:1-10

1. சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்குத் தேவன் நல்லவராகவே இருக்கிறார்.
2. ஆனாலும் என் கால்கள் தள்ளாடுதலுக்கும், என் அடிகள் சறுக்குதலுக்கும் சற்றே தப்பிற்று.
3. துன்மார்க்கரின் வாழ்வை நான் காண்கையில், வீம்புக்காரராகிய அவர்கள்மேல் பொறாமை கொண்டேன்.
4. மரணபரியந்தம் அவர்களுக்கு இடுக்கண்களில்லை; அவர்களுடைய பெலன் உறுதியாயிருக்கிறது.
5. நரர் படும் வருத்தத்தில் அகப்படார்கள்; மனுஷர் அடையும் உபாதியை அடையார்கள்.
6. ஆகையால் பெருமை சரப்பணியைப் போல் அவர்களைச் சுற்றிக்கொள்ளும், கொடுமை ஆடையைப்போல் அவர்களை மூடிக்கொள்ளும்.
7. அவர்கள் கண்கள் கொழுப்பினால் எடுப்பாய்ப் பார்க்கிறது; அவர்கள் இருதயம் விரும்புவதிலும் அதிகமாய் நடந்தேறுகிறது.
8. அவர்கள் சீர்கெட்டுப்போய், அகந்தையாய்க் கொடுமை பேசுகிறார்கள்; இறுமாப்பாய்ப் பேசுகிறார்கள்.
9. தங்கள் வாய் வானமட்டும் எட்டப் பேசுகிறார்கள்; அவர்கள் நாவு பூமியெங்கும் உலாவுகிறது.
10. ஆகையால் அவருடைய ஜனங்கள் இந்த வழியாகவே திரும்புகிறார்கள்; தண்ணீர்கள் அவர்களுக்குப் பரிபூரணமாய்ச் சுரந்துவரும்.

# இலட்சியவாதிகளாய் மாறுங்கள்!

## ஒரு இலட்சியவாதிக்கு அவனுடைய உயிரைவிட அவனுடைய இலட்சியமே மேலானது!

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் தலைமைச் சபையில் அளித்த செய்தி)

இந்த உலகத்தில் ஏராளமான மக்கள் இலட்சியவாதிகளாய் வாழ்கிறார்கள். தங்களுக்கென இலட்சியங்களை வகுத்து வாழும் எண்ணற்ற இலட்சியவாதிகள் உண்டு. ஆனால் நாமோ உலகப்பிரகாரமாய் அல்ல, ஆவிக்குரிய தரிசனங்களைப் பெற்று, ஆவிக்குரிய தரிசனத்தோடு வாழவேண்டும், மாறவேண்டும். ஆவிக்குரிய இலக்குகளை வாழ்க்கையின் அடிப்படையாகக் கொண்டு வாழ்வதுதான் சிறந்த வாழ்க்கை. அதுதான் உண்மையான தரிசனமுள்ள வாழ்க்கை. எவ்வித தரிசனமும், நோக்கமுமின்றி வாழும் ஓர் வாழ்க்கை சிறப்பான வாழ்க்கையாக அமையாது.

ஒரு மனிதனின் வாழ்க்கையில் ஒரு சிறப்புத்தன்மை வேண்டுமானால் மனநிலையில் ஒரு தனித்தன்மை தேவை. நல்ல தரிசனத்தோடு வாழும் மனிதர்கள் காலத்திற்கு ஏற்ப தங்களை மாற்றியமைத்துக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் தாங்கள் பெற்ற ஆவிக்குரிய தரிசனத்திலே உறுதியாய் இருப்பார்கள். நாம் தெளிவான மனநிலையில் இருந்தால்தான் நமது வாழ்க்கையை வெற்றியாகவும் சிறந்ததாகவும் அமைத்து வாழமுடியும்.

சூழ்நிலைக்கு ஏற்ப தங்களது மனநிலையை மாற்றிக் கொள்பவர்கள் வளைந்து, வளைந்து ஓடுகின்ற பாம்புக்கு ஒப்பாவார்கள். உறுதியான வாழ்க்கை முறையைப் பின்பற்றி வாழ்கின்றவர்களே சிறந்த தலைவர்களாகவும், பரலோகத்திலிருந்து தாங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கின்ற வாய்க்கால்களாகவும் இருப்பார்கள். **"இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்"** யாக்கோபு 1:8.

## 1. தேவனை ஆராதிப்பதில், சேவிப்பதில் தரிசனம் பெற்றவர்கள்!

யோசுவா 24:15 சொல்லுகிறது, **கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்; ... நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்...** இங்கே ஒரு கேள்வி கொடுக்கப்படுகிறது. அதாவது யாரை நீங்கள் சேவிப்பீர்கள் ? நாமெல்லோரும் தேவனாகிய கர்த்தரைத்தான் சேவிக்கிறோம் என்பது உண்மை. ஆனால் தேவனை மாத்திரம்தான் சேவிக்கிறோமா என்ற கேள்வி இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றது. யோசுவாவின் சரித்திரத்தை குறிப்பாக 24–ம் அதிகாரத்தை நாம் படிக்கின்ற வேளையிலே, யோசுவாவின் வாழ்க்கையிலே ஒரு சவால் கொடுக்கப்பட்டது. யோசுவாவினிடத்தில் ஆண்டவர் பேசினார்.

தொடர்ச்சி 3–ம் பக்கம்.....

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)



## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



போதகர் சாம் தன் மகள் ஏஞ்சலின் மற்றும் மகன் அலெக்ஸ் உடன்

### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


CHIEF EDITOR
Angeline Selvakumari Henry, M.A., M.Ed.

MANAGING EDITOR
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

ADMINISTRATION
Bro. N. Prakasam, M.A., General Manager

EDITORIAL BOARD
Sis. Jesy Veena Sam
Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Rev. Dr. K.R. Rajasekaran
Dr. A. Richard Samuel, M.A., Ph.D.



EDITOR, PUBLISHER & PRINTER
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 95661 31858



CORE LEADERS
Bro. K. Puratchivendan
Bro. A. Edward Durai
Bro. A. Alvin
Bro. K. Abraham
Sis. Dhanalakshmi Chinnaiah



E.mail ID
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

WEBSITES
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com


YOUTUBE CHANNEL
Echo of His Call


**"... நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை.."**
– யோசுவா 1:5

*கர்த்தருக்குள் மிகவும் அன்பான சகோதர, சகோதரிகளே!*

நமது ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களுக்கு என் வாழ்த்துக்கள். கர்த்தருடைய வார்த்தையை உலகிற்கு எடுத்துச் செல்ல தேவன் நமக்கு அருளியுள்ள அற்புதமான ஆசீர்வாதத்திற்காக அவரை நாங்கள் துதிக்கிறோம். உங்களின் அன்பு, ஆதரவு மற்றும் உதவிகளுக்காக நன்றி செலுத்துகிறோம்.

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையால் ஊழியத்தின் எல்லா செயல்பாடுகளையும், நாம் மீண்டுமாய்த் தொடங்கியுள்ளோம். நம்மோடு இணைந்து செயல்படவும், சிறுபிள்ளைகளை ஆயத்தப்படுத்தவும், நல்ல அருமையான கல்வியாளர்களை நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியில்** தந்து தேவன் ஆசீர்வதித்துள்ளார். அடுத்த சந்ததியினருக்கு மகிமையான சுவிசேஷத்தை கொண்டு செல்ல, நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளில்** சுமார் 15 பிரபலமான பகுதிநேர மற்றும் முழுநேர இறையியல் கல்வியாளர்கள் கடுமையாக உழைக்கின்றனர். அநேக வாலிப சகோதர, சகோதரிகளை இவர்கள் வழிநடத்திச் செல்கின்றனர். இதற்கு தங்கும் வசதி கொண்ட முழுநேர வேதாகமக் கல்லூரி மற்றும், அஞ்சல் வழி இறையியல் கல்வி முறை மிக உதவியாக இருக்கின்றன.




செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி




நெகேமியா வேதாகமக் கல்லூரி

16 மொழிகளில் வெளிவரும் நமது **அழைப்பின் எதிரொலி பத்திரிகைக்காக** நம்மோடு இணைந்து செயல்பட்டுவரும் சுமார் 40 வேதாகம நிபுணர்களாகிய துணை ஆசிரியர்களுக்காகவும், உதவி துணை ஆசிரியர்களுக்காகவும், இதர ஊழியர்களுக்காகவும் நாங்கள் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். கடினமாக உழைக்கும் தேவ பிள்ளைகளை நமது நிர்வாக அலுவலகத்திலும், சுவிசேஷ அச்சகத்திலும் தேவன் தந்துள்ளார். கர்த்தருடைய வேலையை இன்னும் வேகமாகச் செய்ய நமக்கு மேலும் அநேக தரிசனம் பெற்ற தேவ ஊழியர்கள் தேவைப் படுகிறார்கள்.



தமிழ், ஆங்கிலம், தெலுங்கு மற்றும் இந்தி ஆகிய நான்கு மொழிகளிலும் நமது தலைமைச் சபையில், ஒவ்வொரு ஞாயிறு தோறும் காலை 5.30



ஞாயிறு சபை ஆராதனைகள்

*மணி முதல், இரவு 8 மணி வரை ஆறு ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. மலையாள மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய தரிசனம் பெற்ற ஊழியர்கள் தேவை. நமது கிளைச் சபை ஊழியர்கள் மற்றும் உதவி ஊழியர்கள் மூலமாக நமது கிளைச் சபைகளில் ஆங்காங்கே பலவித விசேஷ ஊழியங்களும், பல மொழிகளில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.*

*நமது தலைமைச் சபை ஊழியர்கள், மினி பஸ் மூலமாக சென்னையிலுள்ள நம் கிளை சபைகளுக்கு, ஒவ்வொரு ஞாயிறு பிற்பகலில் சென்று, சிறுவர் ஊழியங்களைச் செய்து நல்ல தேவபிள்ளைகளை உருவாக்கி வருகிறார்கள். கடந்த ஆகஸ்ட் 31, 2022 அன்று நமது சபை வாலிபர்கள், வேதாகமக் கல்லூரி மாணவர்கள் மற்றும் சபைத் தலைவர்களுக்கென்று காலை முதல் மாலை வரை 3 வகுப்புகளாக சிறப்பு கூடுகைகள் நடைபெற்றன. பெங்களூரிலிருந்து போதகர் டாக்டர் சன்னி பிரசாத் அவர்கள் வந்து தேவ வார்த்தையையும், சத்தியங்களையும் விளக்கிக் கூறினார்கள். குஜராத் மாநிலத்திலிருந்து போதகர் நயன் ரஞ்சன் பீரோ அவர்கள் நம்மிடம் வந்து, நம்மோடு தங்கி, முழுநேர வேதாகமக் கல்லூரி மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகளை 2022 ஆகஸ்ட் 15 முதல் 20 வரை நடத்தினார்கள்.*



**போதகர் நயன் ரஞ்சன் பீரோவுடன் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

*இந்தியாவிலும், நமது அண்டை நாடுகளுக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல இத்தகைய தேவஊழியர்கள் பாடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு உங்கள் ஜெபம் தேவைப்படுகிறது.*

*தொடர்ந்து உங்களுக்காக ஜெபித்து வருகிறோம். உங்கள் ஒத்தாசைகளுக்கு நன்றி தெரிவிக்கிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!*

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன் சாம்.**

(+91) 98412 71858 / 98410 71858,

மின்னஞ்சல் : samselvaraj333@gmail.com

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

“இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து கொண்டு வந்தேன். நான் அவர்களை ஆரம்பத்திலிருந்து ஆசீர்வதித்து, என் நாமத்தைக் கொடுத்தேன். துன்பப்படுகின்ற காலங்களிலே நான் அவர்களுடன் கூட இருந்து அவர்களைக் காப்பாற்றினேன். மட்டுமல்லாமல் அவர்களை அந்தகாரப்பிடியிலிருந்து விடுவித்து, சிவந்த சமுத்திரத்தை அவர்கள் வெட்டாந்தரை வழியாக கடந்து செல்லும்படியாக சகாயம் பண்ணினேன். பின்பு பார்வோனின் சேனை அவர்களைத் தொடர்ந்து வந்தபோது, நான் உடனிருந்து காப்பாற்றியிருக்கிறேன்” என்று சொல்லி, ஆவிக்குரியப் பிரகாரமாகவும், உலகப் பிரகாரமாகவும் ஆண்டவர் இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களை சொல்லி விட்டு, இறுதியாக ஒரு கேள்வியைக் கேட்டார். யாரை இப்போது நீங்கள் சேவிப்பீர்கள் ? ஆண்டவரை சேவிக்கின்ற விஷயத்திலே நமக்கு ஒரு உறுதியான தரிசனம் தேவை, வெளிப்பாடு தேவை. இந்நாட்களிலே தேவனைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களும் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு வாழ்பவர்களும் கூட தங்களுடைய வாழ்க்கையிலே சூழ்நிலைகள் மாறும்போது அவர்கள் தாங்கள் பெற்றுக் கொண்ட தரிசனத்தை இழந்து போகின்றவர்களாக, அதிலே உறுதியற்றவர்களாக காணப்படுகிறார்கள். **தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள் ...** நீதிமொழிகள் 29:18

யோசுவா சொல்லுகிறார் “**நானும் என் வீட்டாருமோவென்றல் கர்த்தரையே சேவிப்போம். கர்த்தரைவிட்டு விலகுகிற காரியம் எங்களுக்கு தூரமாயிருப்பதாக**”. நாம் யாரை அதிகமாய் நேசிக்கிறோமோ அவரை சேவிப்பதே நமது ஆராதனையாயிருக்கிறது. தம்முடைய பிள்ளை தம்மை மாத்திரம் ஆராதிக்க வேண்டும் என்னும் விஷயத்தில் தம்மில் உறுதியாய் இருக்கவேண்டும் என்னும் விஷயத்திலே ஆண்டவர் மிகவும் கருத்தாயும், வைராக்கியமாயும் இருக்கிறார். இவ்வுலகத்தில் காலத்திற்கேற்றபடி தனது மனோபாவங்களையும், உபதேசங்களையும், கொள்கைகளையும், இலட்சியங்களையும் மாற்றிக் கொண்டு வாழ்பவர்களை ஆண்டவர் விரும்பமாட்டார். நல்ல ஆவிக்குரிய எதிர்ப்பார்ப்போடு தரிசனத்தைப் பெற்று வாழ்கின்றவர்களையே ஆண்டவர் ஆசீர்வதிப்பார். அநேகருடைய வாழ்க்கையில் ஆண்டவரை ஆராதிக்கவும், அவரைப் பின்பற்றவும் சூழ்நிலைகள் சாதகமாக இல்லை என்றும், சில மக்கள் ஆண்டவரை ஏற்றுக்கொள்ள ஆசைப்பட்டாலும் அவர்கள் சார்ந்திருக்கும் சமுதாயமும் மக்களும் அதற்கு இடங்கொடுப்பதில்லை என்றும் கருதுகிறார்கள். ஆண்டவர் ஒருபோதும் தமது பிள்ளைகளைத் திக்கற்றவர்களாய் விடமாட்டார். அவரை நேசிக்கின்ற பிள்ளைகளை குடும்பமாக இரட்சிப்பார். **...கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்...** அப்போஸ்தலர் 16:31. ஒரு குடும்பத்திலே ஒரு நபர் இயேசு கிறிஸ்துவை நேசித்து, அவரை உண்மையாய் ஆராதிப்பதற்குத் தன்னை அர்ப்பணித்தால் அவருடைய குடும்பம் முழுமையும் இயேசு இரட்சிப்பார். இது தேவனுடைய வார்த்தை.

இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட ஒருவரும் கெட்டுப்போனதாக இந்த உலகத்தில் சரித்திரமே இல்லை. இன்றும் இயேசு கிறிஸ்துவை நேசிக்கிற, சேவிக்கிற பிள்ளைகள்தான் இவ்வுலகை அரசாளுகிறார்கள். தேவனே இன்றும் சர்வாதிகாரியாய் இவ்வுலகை அரசாட்சி செய்து கொண்டிருக்கிறார். உலகிலுள்ள அனைத்து கண்டங்களில் வாழும் மக்களுக்கும் தம்முடைய நாம மகிமையை உயர்த்திக் காண்பித்துக் கொண்டிருக்கிறார். நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என ஆண்டவரை சேவித்து ஆசீர்வாதங்களையும், மேன்மைகளையும் அளவில்லாமல் பெற்றுக் கொண்ட யோசுவாவைப்போல், நாமும் நமது குடும்பமும் நமது குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் கர்த்தரையே சேவிக்கும் பிள்ளைகளாயும், இந்த உன்னத தேவனை சேவிக்க வேண்டும் என்ற உறுதியான இலட்சியம் கொண்டவர்களாயும் மாறவேண்டும்.

குடும்பம் மற்றும் சமூக சூழ்நிலைகளின் நிமித்தமாக ஆண்டவரை ஏற்றுக் கொண்டிருந்தும், வெளிப்படையாக அறிக்கையிடாமலிருப்பீர்களானால் உங்கள் வாழ்க்கையை சற்று மாற்றியமைக்க வேண்டும். உலகத்தில் நீங்கள் பயந்து, பயந்து இரகசிய கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்தாலும் கர்த்தரை பகிரங்கமாக அறிக்கையிட்டே ஆக வேண்டும். **மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்** (மத்தேயு 10:32). நம்முடைய ஜெபங்கள் பரலோகத்தை எட்ட வேண்டுமானால், ஆண்டவர் நமக்கு செய்தவற்றை நாம் மனுஷர் மத்தியில் அறிக்கையிட வேண்டும். ஆகவே, ஆண்டவரை சேவிப்பதில் தைரியமாகத் தீர்மானம் எடுக்க வேண்டும். யோசுவாவின் வாழ்க்கையிலே தேவன் எவ்வளவோ அற்புதங்களையும், இயற்கைக்கு மேலான காரியங்களையும் செய்திருக்கிறார். யோசுவா ஒரு சரித்திர நாயகன். தேவன் யோசுவாவின் மூலம் இவ்வுலகில் இயற்கைக்கு மேலானக் காரியங்களை செய்து காண்பித்தார். ஒரு நெருக்கமான சூழ்நிலையிலே, சமுதாயத்திலே ஜெயம் பெற்று வாழ்ந்த மனிதன்தான் யோசுவா. இன்றும் தோல்வியுற்ற குடும்ப வாழ்க்கையிலே – சூழ்நிலையிலே – சமுதாயத்திலே – நீங்கள் ஜெயம் பெற்று வாழவேண்டுமானால் தேவனை சேவிக்கும் இலட்சியவாதிகளாய் மாறுங்கள்.

## 2. தேவனுக்கும், தேவனுடைய சபைக்கும் முதலிடம் கொடுக்கும் இலட்சியவாதிகள்!

மத்தேயு 6:33–ம் வசனம் சொல்கிறது. **முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.** ஆண்டவராகிய, இயேசுகிறிஸ்து, முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை தேடுங்கள் என்று சொல்கிறார். ஆனால் முதலாவதாக பணத்தைத் தேடு, பணம் இருந்தால் எல்லாமே உனக்கு கிடைக்கும் என்பது உலக மக்களின் கணிப்பு. ஆனால், வேத வசனம் இதற்கு மாறான கருத்தைச் சொல்லுகிறது. வேத வசனம் உலக மக்களின் கணிப்பிற்கு நேர்மாறாக இருக்கிறது. முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அதற்குள் போவதற்குண்டான வழியையும் தேடுங்கள் என்று வேதம் கூறுகிறது. அப்படித் தேடும் போது உலகத்தில் எதிர்பார்க்கும் ஆசீர்வாதங்கள் அனைத்தும் தானாய் உங்களுக்குக் கிடைக்கும். மத்தேயு 6:30–ம் வசனத்தை வாசிக்கையில் ஆண்டவர் நமது விசுவாசத்தை அற்பவிசுவாசம் என்று சொல்கிறார். ஏனென்றால், நாம் நம்முடைய வாழ்க்கையில் எதற்காக கவலைப்பட வேண்டுமோ, அதற்காகக் கவலைப்படு வதில்லை. வேதம் சொல்கிறது, நீங்கள் உங்கள் சரீரத்திற்காகவும், ஆகாரத்திற்காகவும், ஆடைகளுக்காகவும், உலகப் பிரகாரமான தேவைகளுக்காகவும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், காட்டிலே வாழ்கின்ற புஷ்பங்களை அவர் அழகுப்படுத்துகின்றார், காட்டிலே வாழும் மிருகங்களையும், ஆகாயத்துப்பட்சிகளையும் போஷிக்கிறார். ஆனால், காட்டிலே வாழும் மிருகங்களையும், ஆகாயத்துப் பட்சிகளையும் போஷிக்கும் போதும், காட்டிலே உள்ள புஷ்பங்களை அழகுப்படுத்தும் போதும் உங்களை நான் போஷிக்கமாட்டேனோ என்ற ஒரு கேள்வியை ஆண்டவர் கேட்கிறார். முதற்பகுதியிலே யோசுவாவைக் கேட்ட அதே கேள்வி இங்கேயும் கேட்கப்படுகிறது. நீங்கள் எதற்காக கவலைப்பட வேண்டும்? எதற்காக அக்கரைப்பட வேண்டும்? எதற்காக முயற்சி எடுக்க வேண்டும்? தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் மட்டுமேத் தேட வேண்டும். மாறாக, இன்றைய கிறிஸ்தவர்கள் கூட உலக மக்களைப் போல தேவனுடைய ராஜ்யத்திற்கு முக்கியத்துவம் கொடாதபடி, தேவனுடைய ராஜ்யத்திற்கு இரண்டாவது இடத்தைக் கொடுத்து விட்டு முதல் இடத்தை உலகத்திற்குக் கொடுக்கிறார்கள். இதுதான் தோல்விக்கு ஆரம்பம்.

வாழ்க்கையில் நொடிந்துபோன சகோதர, சகோதரிகளே, உங்கள் குடும்பத்தில் உள்ள கவலைகள், கஷ்டங்கள் யாவற்றிற்கும் ஆண்டவரைத் தேடி அவரை நோக்கி குடும்பமாக நீங்கள் ஜெபம் செய்வீர்களானால், அவர் உங்கள் கஷ்டங்களை நீக்குவார், கடன்களைப் போக்குவார்; உங்கள் குடும்பத்தையும், பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பார்; உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல எதிர்காலத்தைக் கொடுப்பார். நான் ஒரு நல்ல மனுஷனாக, நல்ல மனுஷியாக வாழவேண்டும் என்று சொல்லி சிறுவயதிலேயே தீர்மானித்தால், உங்கள் வயோதிப காலத்தில் நீங்கள் திரும்பிப் பார்க்கிற வேளையிலே நீங்கள் நல்லவர்களாக வாழ்ந்திருப்பீர்கள். தொல்லையில்லாத வாழ்க்கை வாழ்ந்திருப்பீர்கள். வேதம் சொல்லுகிறது, **உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்...** (சங்கீதம் 128:2). மற்றவர்களின் கரங்களை எதிர்பார்க்காதபடி ஆண்டவர் உங்களைக் காப்பாற்றுவார். அவர் உங்களை சுமப்பார். உங்கள் வாழ்க்கையில் இவ்வாறான ஆசீர்வாதங்கள் காணப்படும்படியாக நீங்கள் தேவனுக்கடுத்தபடியான காரியங்களைத் தேடுங்கள்.

நாம் செய்யும் ஊழியம் தனிப்பட்டதாக இருந்தாலும் பிறரைச் சார்ந்ததாக இருந்தாலும் அவ்வூழியத்தில் பிரதிபலன் எதிர்பாராது உண்மையுடன் செயல்படும்போது அதற்கேற்ற பலனை நமக்கு பரலோகத்திலிருந்து தர ஆண்டவர் சித்தமாயிருக்கிறார். அவருடைய ஊழியத்திற்கு முதலிடம் கொடுத்து, அது சிறிதாக இருந்தாலும், பெரிதாக இருந்தாலும் அதனை முழுமனதோடு சந்தோஷமாக செய்தால் அது நமக்கு பரிபூரண ஆசீர்வாதத்தைத் தரும். எந்த நேரத்தில், என்ன தேவையோ அந்த நேரத்தில் அவற்றை ஆண்டவர் சரியாகக் கொடுப்பார். வியாதிகள், துன்பங்கள் நிறைந்த இவ்வுலகிலே ஒவ்வொரு நாளும் தமது கரங்களால் நம்மை ஆற்றி தேற்றி வருவார். நமது வாழ்க்கையின் கடைசி பரியந்தம் அனைத்துத் தேவைகளையும் சந்திக்க வல்லவர். அவருடைய கையினாலே கொடுக்கின்ற ஆசீர்வாதங்கள் நிறைவானவைகள், உயர்ந்தவைகள், மேன்மையானவைகள். இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களையும், நன்மைகளையும் அடைய தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுவதற்கு முதலிடம் கொடுக்கும் தரிசனம் பெற்றவர்களாய் இலட்சியவாதிகளாய் மாறவேண்டும்.

### சபைகூடி வருதல்!

பொதுவாக இந்த நாட்களில் குறிப்பாக ஞாயிற்றுக் கிழமைகளில், ஏராளமான தேவமக்கள் தங்கள் தேவாலயங்களுக்குச் சென்று தேவனை ஆராதிப்பதை அலட்சியம் பண்ணி வருகிறார்கள். இந்த விஷயத்தில் சரியானபடி தேவன் தங்களுக்கு அருளிய சபையின் உறுதியான இணைப்புத் தன்மை இல்லாதவர்களாகக் காணப்படுகிறார்கள். இக்காலத்தில் எழும்பியிருக்கும் நூதன ஊழியங்களாலும், தொலைக்காட்சி மற்றும் யூடியூப் போன்ற சமூக வலைதளங்களால் கவர்ந்து இழுக்கப்பட்டு தேவன் அருளிய தங்கள் சபைகளையும், போதகர்களையும் அலட்சியம் செய்கிறார்கள். இது மிகவும் ஆபத்தானது.

1. தேவபிள்ளைகள் யாவரும் தேவ ஒத்தாசையின் மூலம் தங்களுக்கு என்று ஒரு சபையைக் கண்டுபிடிக்கவேண்டும்.

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....


# நெகேமியா மாலை நேர வேதாகமக் கல்லூரி

சேப்பாக்கம் & சந்தோஷபுரம், சென்னை

போதனா மொழி : தமிழ்

Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)

ATA – Regd. Candidate for Membership – NEHEMIAH BIBLE COLLEGE – CHENNAI – ECHO OF HIS CALL – Estd. 1969

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.

Certificate in Theology : ஒரு வருடம்
Diploma in Theology : இரண்டு வருடங்கள்

கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

**GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS**

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் . 2022 அக்டோபர் 19 முதல் நவம்பர் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

அக்டோபர் 19 ⇨ சுவிசேஷம் சென்றடையாத இடங்களுக்கு சுவிசேஷம் சென்றடைய செய்ததற்காக...

அக்டோபர் 20 ⇨ நமது தலைமை மற்றும் கிளைச்சபைகளில், விசுவாசிகளை பெருகப் பண்ணி கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

அக்டோபர் 21 ⇨ நமது தலைமைச் சபையில் நடைபெறும் ஆண்கள் ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

அக்டோபர் 22 ⇨ நமது அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு எல்லா மிஷன் பணித்தளங்களுக்கும் அனுப்பப்படும் சுவிசேஷப் பிரசுரங்களை தேவன் ஆசீர்வதித்து வருவதற்காக ...

அக்டோபர் 23 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரி** மற்றும் **அஞ்சல்வழி இறையியல் கல்வி** ஆகியவற்றை கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

அக்டோபர் 24 ⇨ நமது தலைமைச் சபையில் நடைபெறும் பெண்கள் ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

அக்டோபர் 25 ⇨ வேதாகம கருத்தரங்குகளை தொடர்ந்து நடத்தி வருவதற்காக...

அக்டோபர் 26 ⇨ **அழைப்பின் எதிரொலி பத்திரிகை ஊழியத்தினை** 1969 முதல் இன்றுவரை அர்ப்பணிப்போடு நிறைவேற்றி வருவதற்காக ...

அக்டோபர் 27 ⇨ நமது பணியாளர்கள் அனைவரது குடும்பத்தினர் மீதும் கர்த்தருடைய ஆசீர்வாதம் பொழியப்பட்டதற்காக...

அக்டோபர் 28 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

அக்டோபர் 29 ⇨ **அழைப்பின் எதிரொலி ஊழியங்களின்** வெற்றிகரமான 54–வது வருட பிரவேசத்திற்காக...

அக்டோபர் 30 ⇨ **அழைப்பின் எதிரொலி ஊழியங்களின்** 54–வது ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றதற்காக...

அக்டோபர் 31 ⇨ இதர ஊழியங்களை தாங்கச் செய்த கிருபைக்காக...

நவம்பர் 01 ⇨ கடந்த மாதத்தின் பொருளாதார மற்றும் ஆவிக்குரிய தேவைகளை சந்தித்த கிருபைக்காக...

நவம்பர் 02 ⇨ கடந்த மாதம் முழுவதும் நமது **அழைப்பின் எதிரொலி** ஆலயங்களில் நடைபெற்ற அனைத்து ஊழியங்களையும் ஆசீர்வதித்து வருவதற்காக...

நவம்பர் 03 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்கள் குடும்பத்தையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக....

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

நவம்பர் 04 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்களுக்காகவும், அவர்களின் குடும்ப அங்கத்தினர்களுக்காகவும் ...

நவம்பர் 05 ⇨ நமது பங்காளர்களுக்காகவும், அவர்களது குடும்பத்திற்காகவும் ...

நவம்பர் 06 ⇨ மறுபடியும் சுகவீனமாக உள்ள நமது சகோதரி ஜெஸி வீணா சாம் செல்வ ராஜ் அவர்கள் சுகமடைவதற்காக...

நவம்பர் 07 ⇨ நமது தலைமைப் போதகரது சுயசரிதை எழுதும் செயல்பாடு நிறைவாய் நிகழ்ந்திட...

நவம்பர் 08 ⇨ உலகமெங்கிலும் உள்ள கிறிஸ்தவ ஸ்தாபனங்களுக்காக...

நவம்பர் 09 ⇨ கொரோனா என்ற வைரஸ் உலகத்தை விட்டு ஒழிய...

நவம்பர் 10 ⇨ உலகமெங்கிலும் சமாதானம் நிலவிட...

நவம்பர் 11 ⇨ பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் நீங்க...

நவம்பர் 12 ⇨ இந்த மாதத்தின் **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் அனைத்துத் தேவைகளையும் கர்த்தர் சந்திக்க...

நவம்பர் 13 ⇨ எல்லா கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் ஆசீர்வாதங்களுக்காகவும் அவற்றின் பாதுகாப்பிற்காகவும்...

நவம்பர் 14 ⇨ சகலவிதமான நிலைகளிலும் மற்றும் திட்டமிடுதலிலும் உலக நாடுகள் ஒற்றுமையுடனும், முன்னேற்றத்துடனும் காணப்பட...

நவம்பர் 15 ⇨ அனைத்து மக்களின் மனக்கண்களை கிறிஸ்துவுக்குள் ஒளிரச் செய்ய...

நவம்பர் 16 ⇨ நமது தேசம் அனைத்துவிதத்திலும் ஒற்றுமையாக இருக்கவும், முன்னேற்றமடையவும்...

நவம்பர் 17 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** புதிய மாணவர் சேர்க்கைக்காக...

நவம்பர் 18 ⇨ நமது தலைமைப் போதகர் மற்றும் குடும்பத்தினர் அனைவரையும் சகலவிதமான தீய சக்திகளின் வல்லமைக்கு விலக்கிக் காத்திட...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

2. அந்த சபையுடன் முழுமையாக ஒட்டிக் கொண்டு, அதின் எல்லா ஈடுபாடுகளிலும் தவறாமல் பங்கு பெறவேண்டும்.

3. அந்த சபையின் போதகருக்கு எல்லாவிதங்களிலும் கீழ்ப்படிந்து அவருக்கு உறுதுணையாயிருந்து அவருடன் தேவன் காண்பிக்கிறபடி தேவஊழியம் செய்ய வேண்டும்.

**சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்** எபிரெயர் 10:25. **கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிரகாரங்களில் செழித்திருப்பார்கள்** சங்கீதம் 92:13.

## 3. தேவ நோக்கத்தை நிறைவேற்றும் தரிசனம் பெற்றோர்!

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த காலத்தில் அவர் ஒரு நோக்கத்தை உடையவராக இருந்தார். அவரை ஏராளமான மக்கள் வித்தியாசமான நோக்கத்தோடுப் பின்பற்றி வந்தார்கள். அவருக்கு ஏராளமான கடமைகளும், எதிர்ப்புகளும் இருந்தன. ஆயினும், அவர் தம்மை அனுப்பினவருடைய திட்டத்தை நிறைவேற்றுவதையே தம்முடைய நோக்கமாக கொண்டிருந்தார். இதை நாம் யோவான் 4:34ல் வாசிக்கலாம்: **இயேசு அவர்களை நோக்கி: நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது.**

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் உலக வாழ்க்கையில் அவர் தமது இலட்சியத்தை நிறைவேற்றுவதில் எவ்வளவோ தடைகளும், எதிர்ப்புகளும் ஏற்பட்டன. அக்காலத்து மக்கள் அவரை நம்பவில்லை (மத்தேயு 13:58). அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்ளவில்லை (யோவான் 1:11). அவரை எதிர்த்தார்கள் (மத்தேயு 8:34). அவரைத் தச்சனின் மகன் என்று இகழ்ந்தார்கள் (மத்தேயு 13:55). தகாத கேள்விகளைக் கேட்டுப் புண்படுத்தினார்கள் (யோவான் 8:6). அவரை வாரினால் அடித்தார்கள் (மத்தேயு 27:26). அவர் முகத்தில் துப்பினார்கள் (மாற்கு 15:19). அவரை சிலுவையில் அறைந்து கொலை செய்தார்கள் (மாற்கு 15:24).

இத்தனைக்கும் மத்தியிலும், இந்த உலகத்திற்கு தான் வந்த இலட்சியத்தை நிறைவேற்றுகிற விஷயத்தில் தனித்தன்மை வாய்ந்தவராகவும், அதில் சற்றும் தடம் புரளாதவராகவும் வாழ்ந்துக் காட்டினார். இவர் ஓர் சரியான நோக்கமுடையவர்! இவரைப் போல் நாமும் மாற வேண்டும்.

தேவனுடைய பிள்ளைகளே, உங்களுடைய வாழ்க்கையில் உங்களுடைய நோக்கம் என்ன? நீங்கள் தேவனைப் பிரியப்படுத்த இன்றே முன்வர வேண்டும். தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற உறுதியுள்ளவர்களாக, நோக்கமுடையவர்களாக இருக்கும் போது அவர் உங்களை நிச்சயமாகவே ஆசீர்வதிப்பார்.

## 4. செய்து முடிக்கும் தரிசனம் பெற்றோர்!

யோவான் 17:4–ம் வசனம் இப்படியாக சொல்கிறது: **பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்.** இவ்வசனத்தின் மூலம், தேவன் நமக்கு கொடுத்திருக்கிற, நியமித்திருக்கிற உத்திரவாதத்தை செய்து முடிக்கிற மனநிலை நமக்கிருக்க வேண்டும் என நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார், **கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன். ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்** அப்போஸ்தலர் 20:23,24.

அப்போஸ்தலனாகிய பவுல், "நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்" என்று கூறுவதைப் பார்க்கிறோம். தேவன் நிறைவேற்றிய இந்த உன்னதமான ஊழியத்தை தானும் நிறைவேற்ற விரும்பும் பவுலின் விருப்பத்தை இங்குக் காண முடிகிறது.

இது தேவன் நமது கைகளில் அருளியிருக்கும் ஒரு மேன்மையான உத்தரவாதம். ஆண்டவர் வேலை கொடுக்காமல் யாரையும் அழைப்பதில்லை. அவர் நம்மை அழைத்திருப்பதே அவருடைய பணியை செய்து முடிப்பதற்காகத் தான். தேவன் ஒரு மனுஷனை அந்தகாரப் பிடியிலிருந்து பிரித்தெடுத்து, அவனைத் தம்முடைய பிள்ளையாக மாற்றும்போது அவனுக்கு ஒரு வேலையை அல்லது உத்தரவாதத்தை அல்லது பொறுப்பைக் கொடுக்கிறார். முடிவு பரியந்தமும் நிலைத்திருந்து அவ்வேலையை செய்து முடிப்பதையே தேவன் விரும்புகிறார். இந்த நாட்களில் பலர் பெரிய திட்டங்களை அறிமுகப்படுத்தி ஆரம்பிக்கின்றனர். ஆனால் வழியில் ஏதாவது தடைகள் வரும்போது, தங்கள் நோக்கத்தையும், இலட்சியத்தையும் விட்டுவிட்டு தள்ளிப்போடவும், மாற்றுப் பாதைகளில் ஓடவும் முற்படுகின்றனர். தோல்வியும் அடைகின்றனர். **தரிசனம் பெற்ற ஒருவருக்கு அந்தத் தரிசனம் அவருடைய உயிரைவிட மேலானது.** இலட்சியவாதிக்கு அவருடைய தரிசனம் அவருடைய உயிரைவிட மேலானது!

இந்தச் செய்தியைப் பிரசங்கிக்கும் என்னை இப்போது பார்க்கிறவர்கள், சகோதரர்

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....


முழுநேர இந்தி வகுப்புகள்
நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.

வேளச்சேரி, சென்னை

போதனா மொழி : இந்தி

Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும்
போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.

Certificate in Theology : ஒரு வருடம்
Diploma in Theology : இரண்டு வருடங்கள்

கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
3. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்)
தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒரியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகன்.
4. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (இரு இடங்களில்) மாலை நேரம் / முழு நேரம்
5. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
7. பயிற்சி வகுப்புகள்
8. சுவிசேஷக் கூட்டங்கள்
9. கைப்பிரதி வினியோகம் – தொடர் ஊழியம்
10. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி
12. சிறுவர் வேத பாடசாலை – ஞாயிறு காலை 8.30 மணி மாலை 4.00 மணி
13. தமிழ் ஆராதனைகள் – ஞாயிறு காலை 8.00 மணி & 10.00 மணி
14. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
15. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
16. தமிழ் – ஆங்கிலம் ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
17. போதகர் ஆலோசனைக் கூட்டம் – ஞாயிறு மாலை 4.00 மணி
18. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
19. இறையியல் கல்வி – புதன் மாலை 6.30 மணி
20. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
21. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
22. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
23. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
24. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 5.30 மணி
25. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4. 00 மணி
26. இரவு ஜெபம் – 2–ம் வெள்ளி இரவு 9.30 மணி
27. உபவாச ஜெபம் – மூன்றாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
28. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
29. அதிகாலை ஜெபம் – தினமும் காலை 5.00 மணி
30. ஊழியர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
31. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்

## I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அலுவலகப் பணியாளர்கள் தேவை!

அழைப்பின் எதிரொலி ஊழியத்திற்காக கம்யூட்டர் மற்றும் தட்டச்சு ஆகியவற்றில் அனுபவமும், திறமையும் வாய்ந்த **அலுவலகப் பணியாளர்கள் தேவை.**

தொடர்புக்கு :
அழைப்பின் எதிரொலி
செல் : 98412 71858
மின் அஞ்சல் : sam@echoofhiscall.org

## வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## பத்திரிகை ஊழிய தரிசனத்தின் வளர்ச்சி!!

## PROGRESS OF MY VISION IN PUBLICATIONS!!




சகோ. என். ஜீவானந்தம்



போதகர் எஸ். தேவதாசன்

நான் கல்வி கற்கும் காலத்திலேயே புத்தகங்களைப் படிப்பதில் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தேன். தேவ செய்திகளைத் தாங்கி வெளிவந்து கொண்டிருந்த மாத பத்திரிகைகளான **போதகர் எஸ். தேவதாசன்** அவர்கள் வெளியிட்ட வருகையின் தூதன் மற்றும் **சகோ. என். ஜீவானந்தம்** அவர்கள் வெளியிட்ட மகிழ்ச்சி போன்றவை என் எண்ணங்களுக்கு ஒரு உந்து விசையாக அமைந்தன. எப்படியாகிலும், நான் ஆண்டவர் இயேசு கிறிஸ்து மூலம் பெற்ற இம்மைக்கும், மறுமைக்கும் உரிய நன்மைகளை உலகத்தின் வெளிச்சத்திற்கு அச்சுப்பிரதிகள் மூலம் கொண்டு வரவேண்டும் என்பது என் உள்ளத்தின் ஆழமான வாஞ்சையாக இருந்தன. ஆனால், பேனா, காகிதம், அச்சகம் ஆகிய தேவைகளை சந்திக்க என்னிடம் தேவையான பொருளாதாரம் இல்லாமல் இருந்தது.




Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

# வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts 17:6.

Vol. 63 — கர்த்தாவே, நியாயத்தை கேட்டருளும், என் கூப்பிடுதலைக் கவனியும், சங்.17:1 — செப்டம்பர் 2022 No.9



எனவே, என் அனுதின ஜெபம் மற்றும் தியான நேரங்களில் ஆண்டவர் இயேசு அளித்த உணர்வுகளையும், வெளிப்பாடுகளையும் துண்டு காகிதங்களில் எழுதி வைப்பதை வழக்கமாகக் கொண்டேன். அவற்றின் மேல் என் கைகளை வைத்து, மேற்கொண்டு நான் என்ன செய்ய வேண்டும் என்று ஆண்டவரிடம் கேட்பதையும் என் வழக்கமாகக் கொண்டேன்.

இப்படி ஏராளம் காகிதத் துண்டுகள் என் அறையில் பெருகிவிட்டபடியால் அவை எனக்கு ஒருவிதமான பாரத்தை என் வாழ்க்கையில் கொண்டு வந்தன.

எனவே, எனக்கு கிடைக்கும் கைச்செலவுக்கான பணம், உடை வாங்குவதற்குக் கிடைக்கும் பணம், ஆகாரத்திற்கு கிடைக்கும் பணம் ஆகியவற்றைத் திரட்டி என் ஊழியத்திற்கு அத்தியாவசியமான நகல் எடுக்கும் மெல்லிய காகிதம் (manifolding paper) பேனா, மை போன்றவற்றை வாங்கி சேமித்து வைத்து எனக்கு தேவன் அளித்த செய்திகளை சிறிது சிறிதாக எழுத ஆரம்பித்தேன்.

இப்படி ஒவ்வொரு முறையும் கையினால் எழுதப்பட்ட தேவன் அளித்த செய்திகளை என் நண்பர்களுக்கும், அனுதினம் சந்திக்கும் நபர்களிடமும் வழங்கி ஒரு நல்ல வரவேற்பைப் பெற்றேன். சில மாதங்கள் கழித்து தேவனுடைய செய்திகளை தட்டச்சு செய்து அதற்குரிய ஸ்டென்சில் காகிதங்களில் (Stencil Paper), அக்கால நகல் எடுக்கும் இயந்திரம் (cyclostyling machine) மூலம் நகல் எடுத்து, மாதந்தோறும் ஜனங்களுக்கு வினியோகம் செய்தேன். சிறிதுகாலம் கழித்து அதனை அச்சகத்தின் (Printing Press) மூலம் அதிகமான பிரதிகளை பணம் கொடுத்து அச்சிட்டு நான் தனியாகவே எல்லா பைண்டிங் வேலைகளையும் செய்து வினியோகம் செய்தேன். கிறிஸ்தவரல்லாத காலஞ்சென்ற என் நண்பர் திரு. மு. முனுசாமி என்பவர் எனக்கு உதவி செய்தார். ஆரம்பகாலத்தில் கால்நடையாக தலையிலும், தோள்களிலும் சுமந்து சென்றேன்.




சகோ. மு. முனுசாமி

முதலில் **அழைப்பின் எதிரொலி** (Echo of His Call) என்ற பெயரில் தமிழ் – ஆங்கில மாதப் பத்திரிகையாகவும், பின்னர் மாதம் இருமுறை தமிழ் – ஆங்கிலப் பத்திரிகையாகவும், அதன் பின்னர் தமிழ், ஆங்கிலம் தனித்தனி பத்திரிகைகளாகவும் பதிவு செய்து பின்னர் ஒவ்வொன்றாக தமிழ், ஆங்கிலம், சிங்களம், மலையாளம், ஆப்ரிகன், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, அஸ்ஸாமி, வங்காளம், உருது, நேபாளி, குஜராத்தி, ஒடியா, பஞ்சாபி ஆகிய 16 மொழிகளில் தனித்தனி



16 மொழிகளில் அழைப்பின் எதிரொலி பத்திரிகைகள்



**போதகர் சாம் தன் மகள் ஏஞ்சலின் உடன்**
**(பத்திரிகை விநியோகத்திற்கு சென்றபோது)**

பத்திரிகைகளாக இந்திய அரசாங்கத்தில் பதிவு செய்து உலகளாவிய அளவில் அதிகமான மொழிகளில் வெளியிடப்படும் ஒரே கிறிஸ்தவ பத்திரிகை என்றத் தகுதியிலும், இந்தியாவின் ஆவிக்குரிய தொனியாகவும் விளங்குகிறது. இந்த பத்திரிகைகளை மிதிவண்டி மூலம் பல்வேறு இடங்களுக்கு சென்று விநியோகம் செய்த என்னை, கர்த்தர் என் மகள் ஏஞ்சலின் செல்வகுமாரியுடன் மோட்டார் சைக்கிளைக் கொண்டு வெகுதூர இடங்களில் உள்ள மக்களுக்கு விநியோகம் செய்ய வைத்தார். இன்னும் சிந்தி, கொங்கணி, மணிப்பூரி போன்ற மொழிகளிலும் வெளியிட ஆயத்தங்களைச் செய்துள்ளேன். ஆனால் சரியான ஊழியர்கள் கிடைக்காததால் அத்திட்டம் செயல்படவில்லை.

இப்பத்திரிகை செய்திகளை தமிழ் அல்லது ஆங்கிலத்தில் தயாரித்து, உலகத்தின் பல பாகங்களிலிருந்து என்னுடன் இணைந்து செயல்படும் துணைஆசிரியர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் இதர ஊழியர்களின் அயராத உதவியுடன் மூலம் தங்குதடையின்றி வெளியிட தேவன் உதவி செய்து வருகிறார். இவர்களின் சில பெயர்கள் பின்வருமாறு:

சகோதரி செரீனா பெவின், போதகர் கே. ஆர். ராஜசேகரன், போதகர் டாக்டர் ஏ. ரிச்சர்ட் சாமுவேல், போதகர் ஸ்டீபன் ஜோசப், சகோ. ஜெயரத்னா டி சொய்சா, சகோதரி மஞ்சுளா வீரபாகு, சகோதரி ரேணுகா ராஜபக்சா, சுவிசேஷகர் பென்ஜமின் மோசஸ், சகோதரர் மோகன்குமார், டாக்டர் மரிக்கி நெல்சன் (Marietjie Nelson), போதகர் என். மோகன் பாபு, சகோதரி டாரதி எஸ். தாமஸ், போதகர் ஆர். ராமகிருஷ்ணா, போதகர் சசி திவாரி, போதகர் ஜோசுவா ராஜ், சகோதரி பொர்னாலி தபராஜ், போதகர் டாக்டர் அஞ்சன் குமார் சிங், சகோதரர் இந்திரஜித் ராம், போதகர் சிவேந்தர் குமார், சகோதரர் புவன் தேவ்கோடா, சகோதரர் ராஜ்குமார் பண்டாரி, சகோதரர் பங்கஜ் சி வாடியா, சகோதரி சுராமா சாமுவேல், போதகர் ஆசிஷ் ரமேஷ் பண்டாரி, சகோதரர் என். பிரகாஷ், சகோதரிகள் கீதா குருசாமி, இ. டெய்சி ராணி, எஸ். திருமகள், இ. விசாலாட்சி, சகோதரர்கள் ஜான் ரோட்ரிக்ஸ், சி. அந்தோணி ராஜ், சி. ஜே. ஜோசப், எம். மணி, கே. இந்திரேஷ் குமார், எல். மோகன், ஆர். இம்மானுவேல் பால் மற்றும் ஆர். விஜய்.

இவை யாவும் என் கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது! **அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது** சங்கீதம் 118:23.

**... அவன் ஒருவனாயிருக்கையில் நான் அவனை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, அவனைப் பெருகப் பண்ணினேன்** ஏசாயா 51:2. **சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்** 1 சாமுவேல் 2:8.

***

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

சாமுக்கு என்ன பிரச்சினையிருக்கிறது ? என்று நினைப்பது வழக்கம். ஆனால் நான் என் தரிசனத்தையும், இலட்சியத்தையும் காப்பாற்றவும், நிறைவேற்றவும் கடந்த சுமார் 54 வருடங்களில் செலுத்திய கிரயமும், செய்த முதலீடும் அளவிட முடியாதவை. பல நேரங்களில் என் சரீர பெலவீனத்தாலும், பணப்பிரச்சினைகளாலும் மற்றும் நான் நம்பிய நண்பர்களாலும், உறவினர்களாலும் எனக்கு வந்த நெருக்கங்கள் கொஞ்சநஞ்சமல்ல. நான் பெற்றுக்கொண்ட தரிசனத்தை நிறைவேற்றும் என் இலட்சியப் பயணத்தைத் தடுத்து நிறுத்தும் சக்திகள் இன்றைக்கும் எழுத்தின்படி என்னைத் தினமும் சோர்வு அடையச் செய்ய முயற்சிக்கின்றன. ஆனால், **என்னைப் பெலப்படுத்துகிற இயேசு கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு** பிலிப்பியர் 4:13 என்கிற வாக்குத்தத்தத்திலும், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்பதை அறிந்திருக்கிறேன் (2 தீமோத்தேயு 1:12) என்கிற உறுதியிலும், **அவர் என்னைக் கொன்று போட்டாலும் ஒப்புக் கொடுத்தாலும் அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்** ... யோபு 13:15 என்கிற அசைக்க முடியாத தரிசனத்திலும் நான் திடமாயிருக்கிறேன். இச்செய்தியைப் படிக்கும் நண்பரே, நீரும் இப்படி மாற முடியுமா ?

கட்டுகளும் உபத்திரவங்களும் தனக்கு உண்டென்று அறிந்திருந்தும் அவைகளைக் குறித்து கவலைப்படாமல், தன் பிராணனையும் அருமையாக எண்ணாமல், தேவன் தனக்கு நியமித்திருக்கும் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், கிருபையின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கவும் தன்னை அழைத்த தேவனின் அழைப்பை நிறைவேற்றவுமே விரும்புவதாக கூறிய பவுல் தீமோத்தேயுவிற்கு எழுதுகையில், **நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன்** ... என 2 தீமோத்தேயு 4:7–ல் கூறுகிறார். எனவே ஆண்டவர் நமக்கு கொடுத்திருக்கும் உத்தரவாதங்கள், தாலந்துகள், வரங்களை, நாம் பிரயோஜனப்படுத்த முன் வரவேண்டும். நமது ஊழியத்தை நிறைவேற்றி, "எனக்கு நியமித்த ஓட்டத்தை சந்தோஷத்தோடே முடித்தேன்" எனக்கூறும் தரிசனம் பெற்றவர்களாய் மாறுங்கள்.

## 5. பரலோகத்தை இலக்காய் கொள்ளும் பேறு பெற்றோர்!

பரிசுத்த பவுல் தன்னுடைய இலக்கைக் குறித்து சொல்லுகிற வேளையிலே, பிலிப்பியர் 3:13–14–ல் **சகோதரரே, அதைப்பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்** என்று கூறுகிறார். நம்முடைய வாழ்க்கையிலே தேவன் நமக்கு ஒரு இலக்கைக் கொடுத்திருக்கிறார். தேவன் நமக்கு ஒரு பந்தயப் பொருளையும் வைத்திருக்கிறார்.

பரலோகத்திற்கு நேராக நாம் இலக்கை வைக்கும்போது, தேவன் நம்மை ஆசீர்வதிக்கிறார். இந்த பூலோக காரியங்கள் மேல் நாம் இலக்கு வைத்திருப்போமானால் நாம் தோற்றுப் போவோம். பின்னானவைகளாகிய உலக இன்பங்களையும், நன்மைகளையும் மறந்து, சிலுவையை முன்னாக நிறுத்தி நமக்கு முன்னேயிருக்கும் இலக்காகிய பரலோகத்தை நோக்கி நமது வாழ்க்கையைத் தொடர வேண்டும். தேவனை அறியாத மக்களை தேவனை நோக்கித் திசை திருப்புகிற ஒரு மனநிலை வேண்டும். நம் மனநிலையையும், இலக்கையும் பரலோகத்திற்கு நேராக வைக்கும்போது நாம் ஆசீர்வதிக்கப்படுவோம். அழிந்துபோகும் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களுக்கு நேராக இல்லாமல் அழியாத பரலோகத்தை இலக்காகக் கொள்ளும் தரிசனம் பெற்றோராய் மாறுங்கள். **நீங்கள் கிறிஸ்துவுடனே கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்.**

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால் நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள். ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள் கொலோசெயர் 3:1–5.

************

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **S. Sam Selva Raj** |
| A/C No. | : | **1023 2934 679** |
| IFSC | : | **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : | **SBI NIN BB 455** |

### *2. Bank : ICICI Bank*

| | | |
|---|---|---|
| Branch | : | **Anna Salai, Chennai-6** |
| Name | : | **Echo of His Call** |
| A/C No. | : | **6038 0502 2319** |
| IFSC | : | **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : | **1023 2923 805** |
| IFSC | : | **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
E.mail : sam@echoofhiscall.org

# அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

❋ வருட சந்தா ரூ. 100/– ❋ ஆயுள் சந்தா ரூ. 2000/–

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

## அழைப்பின் எதிரொலி,

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

## YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/21-23**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th SEPTEMBER 2022**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by him at **Echo of His Call Printers** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**